# அரசு கல்வியியல் கல்லூரி


குமாரபாளையம் - 638 183,
நாமக்கல் மாவட்டம்.



# ஆண்டு மலர்

## ★2021-22★

Scanned with CamScanner




Scanned with CamScanner

# ஆண்டு மலர்

**2021 - 2022**

# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் - 638 183. நாமக்கல் மாவட்டம்

www.gcekpm.ac.in



Scanned with CamScanner

## ஆண்டு மலர் 2021 - 2022

### மலர்க்குழு

தலைவர்

முனைவர் **அ.ஜான் பீட்டர்**

முதல்வர்

உறுப்பினர்கள்

முனைவர் **வெ.மனோகரன்**

உதவிப்பேராசிரியர் – தமிழ்

முனைவர் **சா.மேபல் சொருபராணி**

உதவிப்பேராசிரியர் – ஆங்கிலம்

**ஆ.தங்கராஜ்** II B.Ed., தமிழ்

**க.மெய்யப்பன்** I B.Ed., வரலாறு





Scanned with CamScanner

# முதல்வர்




## முனைவர் அ.ஜான் பீட்டர்

கல்லூரி முதல்வர்

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை (குறள் : 594)

பொருள்: உறுதியான ஊக்கம் உடையவரை நாடி உயர்வானது வழிவினவிச் செல்லும்.



Scanned with CamScanner



கல்லூரிப் பேராசிரியர்கள்



கல்லூரி அலுவலர்கள்



Scanned with CamScanner



இரண்டாம் ஆண்டு மாணவர்கள்



Scanned with CamScanner



முதலாம் ஆண்டு மாணவர்கள்



Scanned with CamScanner

# மாணவப் பொறுப்பாளர்கள்

## இரண்டாம் ஆண்டு



**ரா.பிரவேந்திரன்**
மாணவர் தலைவர்



**ரா.சங்கீதா**
மாணவர் துணைத்தலைவர்



**மன்றப் பொறுப்பாளர்கள்**

## முதலாம் ஆண்டு



**ஆ.ஆனந்தன்**
மாணவர் தலைவர்



**லோ.தீபக்**
மாணவர் துணைத்தலைவர்



Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் – 638 183. நாமக்கல் மாவட்டம்.

## 67 ஆம் ஆண்டுவிழா

## ஆண்டறிக்கை 2021 - 2022

1955 - 56 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு தமிழகம் முழுவதும் பணியாற்ற பல ஆயிரம் ஆசிரியர்களை உருவாக்கிய பெருமைக்குரிய இக்கல்வி நிறுவனத்தின் 67 ஆம் ஆண்டு அறிக்கையைச் சுருக்கமாக உங்கள் முன் வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

ஒற்றைச்சாளரத் தேர்வு முறையில் தமிழ்நாடு அரசு இட ஒதுக்கீடு முறைமையின் அடிப்படையில் ஆண்டொன்றிற்கு 100 மாணவர்களுக்கு இந்நிறுவனத்தில் முதலாம் ஆண்டு பி.எட் வகுப்பில் சேர்க்கை அளிக்கப்படுகிறது.

இருபாலருக்கும் விடுதி வசதியுடன் கூடிய தமிழ்நாட்டின் ஒரே அரசு கல்வியியல் கல்லூரி என்ற பெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு.

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் (NCTE) விதிமுறைகளின்படி முதல்வர், 4 கல்வியியல் உதவிப் பேராசியர்கள்,8 பாடப்பொருள் உதவிப் பேராசியர்கள்,1 உடற்கல்வி இயக்குநர் ஆகியோர் தற்போது பணியில் உள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர் ஒருவர், DIET ஒப்பந்த ஆசிரியர்கள் ஐவர், கௌரவ விரிவுரையாளர் ஒருவர் உள்ளிட்ட 14 பேர் கல்லூரியில் பணியாற்றுகின்றனர். நூலகர் பணியிடம் காலியாக உள்ளது.

அலுவலகத்தில் கண்காணிப்பாளர் 1, உதவியாளர் 1, இளநிலை உதவியாளர் 1, அலுவலக உதவியாளர் 1 ஆகிய நால்வர் மட்டுமே பணியில் உள்ளனர். 15 அலுவலகப் பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. வெளி முகமை அடிப்படையில் ஒரு தூய்மைப்பணியாளர், ஒரு இரவுக் காவலர் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

இக்கல்வியாண்டில் ஆங்கில இணைப் பேராசியர் முனைவர் செ.பார்த்திபன் அவர்கள் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக 17.6.2021 அன்று அகால மரணமடைந்தார். ஆய்வக உதவியாளர் திரு. ச.வேலப்பன் அவர்கள் உடல் நலமில்லா நிலையில் சிகிச்சைப் பலனின்றி 29-09-2021 அன்று அகால மரணமடைந்தார். கல்லூரிக்கு மிகச்சிறப்பான நிலையில் பங்களிப்பு ஆற்றிய இவர்களது ஆன்மா அமைதியில் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

முதலாமாண்டு மாணவர் சேர்க்கை 2021 அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கி நடைபெற்றது. மாணவர் சேர்க்கைக்குப் பின்னர் 20-10-2021 அன்று ஒருமுகப்பயிற்சி மற்றும் மாணவர் இணைப்பு விழா (Bridge Course) கல்லூரியில் நடைபெற்றது.

புதுதில்லி NCERT இல் பணியாற்றும் பேராசிரியர் முனைவர் ஆர். மேகநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக இணையவழிப் பங்கேற்று ஆசிரியர் பணி வாய்ப்பு, அதன் பரிமாணங்கள் பற்றி விளக்கவுரையாற்றினார். தொடர்ந்து கல்லூரிப் பேராசிரியர்கள் கல்லூரிப் பாடத்திட்டம், பயிற்சி முறைகள், தேர்வுகள் பற்றிய அறிமுக உரை ஆற்றினர்.

தற்போது இக்கல்லூரியில் 93 இரண்டாமாண்டு மாணவர்களும், 100 முதலாமாண்டு மாணவர்களும் பயின்று வருகின்றனர். கொரோனா பெருந்தொற்று காரணமாகத் தொடக்கத்தில் இணையவழி (Online) வகுப்புகளும் பின்னர் நேரடி வகுப்புகளுமாகக் கல்வி பயிற்சி பெற்று வருகின்றனர்.



Scanned with CamScanner

இரண்டாமாண்டு மாணவர்கள்(2020-2022) நாமக்கல் மாவட்டத்தில் 19 பள்ளிகளில் 50 பேரும்,ஈரோடு மாவட்டத்தில் 16 பள்ளிகளில் 19 பேரும், சேலம் மாவட்டத்தில் 15பள்ளிகளில் 24 பேரும் 80 நாள் பயிற்சி பெற்று ஏப்ரல் மாதம் நடைபெற்ற செய்முறைத் தேர்வுகளைச் சிறப்பாக நேரடியாகப் பங்கேற்று அனைவரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இரண்டாம் மற்றும் முதலாமாண்டு மாணவர்களுக்கான பல்கலைக்கழக எழுத்துத்தேர்வுகள் ஜூலை மாதத்தில் நடைபெற உள்ள நிலையில் 29.06.2022 இறுதி வேலைநாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பள்ளிகளைப் பார்வையிடுதல் என்ற அடிப்படையில் மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பள்ளிகளைக் கல்லூரி மாணவர்கள் 11-10-21, 12-10-21, 11-10-21, மற்றும் 29-03-2022,30-03-2022 ஆகிய தேதிகளில் பார்வையிட்டனர்.

**கல்லூரி விடுதி**

கல்லூரியுடன் இணைந்த மாணவர் விடுதி சிறப்புடன் செயல்படுகிறது. குறிஞ்சி மாணவர் இல்லத்தில் 29 பேரும், காவிரி மாணவியர் இல்லத்தில் 57 பேரும் என மொத்தம் 86 பேர் இவ்வாண்டு தங்கிப் பயில்கின்றனர். நாளொன்றுக்கு ரூ.100 என்ற கட்டணத்தில் மாணவர்களுக்குத் திட்டமிடப்பட்ட அட்டவணையின்படி உணவு, ஒப்பந்த அடிப்படையில் தயார் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. வாரம் ஒன்றிற்கு இரு முட்டைகள், மாதமொன்றிற்கு இரண்டு நாள் கோழிக்கறி உணவு உள்ளிட்ட உணவு வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு தூய்மையான குடிநீர் RO முறையில் சுத்தம் செய்து வழங்கப்படுகிறது. வெந்நீர் குடிப்பவர்களுக்கு நான்கு மின்கெட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன. இணைய மின்னணு முறையில் தினசரி வருகைப்பதிவு மேற்கொள்ளப்படுகிறது. விடுதியின் காப்பாளராக முதல்வரும், துணைக்காப்பாளராக உதவிப்பேராசிரியர் முனைவர் க.மா.வெங்கடேசன் அவர்களும் பொறுப்பில் உள்ளனர்.

**கல்வி உதவித்தொகை**

இக்கல்லூரியில் பயிலும் தகுதியுடைய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படுகிறது. அதன்படி பி.வ (BC) மி.பி.வ.(MBC) மாணவர்களுக்கு ரூ.7,24,925/- மற்றும் 20 ப.வகு.( SC) பழ.வ.( ST) மாணவர்களுக்கு ரூ. 2,11,820/- இவ்வாண்டு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பெற்றோர் ஆசிரியர் கழகம்**

பதிவுபெற்ற பெற்றோர் ஆசிரியர் கழகம் இக்கல்லூரியில் செயல்படுகிறது. மாணவர் கல்விசார்ந்த கல்லூரி வளர்ச்சி சார்ந்த, பணிகளுக்குப் பெற்றோர் ஆசியரியர் கழகம் உதவி செய்கிறது. இதன் தலைவராக முதல்வரும், செயலாளராகப் பெற்றோரும், பொருளாளராக உதவிப்பேராசியர் முனைவர் வெ.மனோகரன் அவர்களும் செயல்படுகின்றனர். கல்லூரி விழாக்கள், மாணவர் கல்விச் சுற்றுலா, மின்சாரத் தானியங்கி மணி, வளாக வரைபடம், அமுதப்பெருவிழா கொடிமேடை, மாணவர்களுக்கான சிறப்பு பயிற்சிகள் ஆகியன பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிதியில் இவ்வாண்டு ( 2021-22 ) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**குடிமைப் பயிற்சி முகாம்**

கல்லூரியின் முதாலாமாண்டு மாணவர்களுக்குக் குடிமைப் பயிற்சி முகாம் கல்லூரியில் 9-10-21, 04-02-2022 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி வளாகத் தூய்மைப்பணி, விழிப்புணர்வு உரைகள் ஆகியன இந்நிகழ்வில் இடம்பெற்றன. உடற்கல்வி இயக்குநர் முனைவர் மொ.ரவி அவர்கள் இத்திட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்பாகச் செயல்படுகின்றார்.



Scanned with CamScanner

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆசிரியர்கள், கற்பித்தல் கருவிகள், நூலகம், விளையாட்டு உள்கட்டமைப்புகள் பரிமாற்றம் ஆகியன இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன. கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ஆ.ரேணுகா அவர்களுக்கும் நோடல் அலுவலர் முனைவர் ரகுபதி அவர்களுக்கும் இக்கல்லூரியின் நோடல் அலுவலர் முனைவர் சு. வைரமணி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**உடற்கல்வி**

கல்லூரியின் ரூசா திட்ட நிதியில் ரூ. 17 லட்சம் செலவில் புனரமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட மைதானம் 03-09-2021 இவ்வாண்டு பயன்பாட்டுக்கு முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்களால் அன்று திறக்கப்பட்டது.

ஒவ்வொரு புதன்கிழமையும் மாணவர்களுக்கு யோகா வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாண்டு மதிலகப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. 50 க்கும் மேற்பட்ட பல்வேறு பிரிவுகளில் உள் அரங்கப்போட்டிகள், தடகளப்போட்டிகள், அணி விளையாட்டுப்போட்டிகள் மாணவ மாணவிகளுக்குத் தனித்தனியே நடத்தப்பட்டன.

29-05-22 அன்று கல்லூரி விளையாட்டு விழா சிறப்பான முறையில் நடைபெற்றது. மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் காவல் ஆய்வாளர் திரு. நந்தகுமார் தடகளப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். பிற்பகல் பரிசளிப்பு விழாவில் தஞ்சாவூர் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. சுபாஷ் சந்திரபோஸ் பங்கேற்று உரையாற்றிப் பரிசுகள் வழங்கினார். உடற்கல்வி இயக்குநர் முனைவர் மொ.ரவி அவர்களுக்கு அன்பான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுற்றுச்சூழல் மன்றம்**

கல்லூரி பல்லுயிர் பெருக்க உயிரியல் மண்டலமாக விளங்குவதால் சுற்றுச்சூழல் சிறப்பாகப் பேணப்படுகிறது. மூலிகைச்செடிகள் பயிரிடுதல், பனைவிதைகள் நடுதல், விதைப்பந்துகள் தயாரித்து வினியோகம் செய்தல்,புகையில்லாத விபத்தில்லாச் சுற்றுச்சூழல் தீபாவளி கொண்டடுதல், சுற்றுச் சூழல் விழிப்புணர்வு போட்டிகள், சித்த மருத்துவ விழிப்புணர்ச்சி நிகழ்ச்சி ஆகியன இச்சங்கத்தின் இவ்வாண்டின் முக்கியமான பணிகளாகும். முனைவர் சு.வைரமணி அவர்கள் இம்மன்றத்தினைச் சிறப்பாக வழி நடத்துகிறார்கள்.

**வேலைவாய்ப்பு வழிகாட்டு மையம்**

இவ்அமைப்பின் சார்பில் இரண்டு பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களைத் தேர்வு செய்ய வளாக நேர்காணல் கல்லூரியில் 15-03-2022 & 11-05-2022 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. 16 பேர் வேலைக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். வேலைவாய்ப்புச் செய்திகள் வாட்சப் குழுக்கள் வழியாகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராக முனைவர் த.யுவராஜ் செயல்படுகிறார்.

**கல்விச்சுற்றுலா**

சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான விழிப்புணர்வு பெறுதல் வேண்டி இரண்டாமாண்டின் மாணவர்கள் 67 பேர் கலந்து கொண்டு சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. மே மாதம் 6, 7 ஆம் தேதிகளில் இராமேஸ்வரம், தனுஷ்கோடி,அரிச்சல் முனை, டாக்டர் அப்துல்கலாம் நினைவிடம், பாம்பன்பாலம், கீழடி, மதுரை நாயக்கர் மஹால், மீனாட்சி அம்மன் கோவில், கொடைக்கானல், ஆகிய இடங்களுக்கு ஆசிரியர் துணையுடன் மாணவர்கள் சுற்றுலா சென்று வந்தனர்.



Scanned with CamScanner

**கல்லூரியின் ஆண்டு பராமரிப்பு மற்றும் சிறப்பு பழுது பார்த்தல் பணிகள்**

கட்டட, மின்சார ஆண்டு பராமரிப்பு சிறப்பு பழுதுபார்த்தல் பணிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டன. கட்டிடம் பழுது பார்த்தல் ரூ.5,00,000/- செலவில் மேற்கொள்ளப்பட்டது. டாக்டர் இராதாகிருஷ்ணன் அரங்கத்தின் பின்புறம் தரைதளம் அமைத்தல் கல்லூரிக்கு முன்புறம் தரைதளம் பகுதியாக அமைத்தல் ஆகிய பணிகள் இத்தொகையில் மேற்கொள்ளப்பட்டன. மின்சாரப் பழுதுபார்த்தல் பணிகள் ரூ.2,00,000/- செலவில் மேற்கொள்ளப்பட்டன.

ரூசா நிதியில் செலவிடப்படாத தொகையாகப் பொதுப்பணித்துறையால் திருப்பி அனுப்பப்பட்ட ரூ.2,00,000/- தொகையை ரூசா மாநில திட்டஅலுவலர்கள் வழிகாட்டுதலில் கல்லூரிக்குச் செலவிடப்பட்டது. இத்தொகையில் நுழைவாயிலில் இணைப்புச் சாலை பேவர் பிளாக் (Paver Block) பதித்து அழகுற அமைக்கப்பட்டது.

**பல்வேறு துறைகளின் நிகழ்வுகள்**

**தமிழ்த்துறை**யின் சார்பில் தமிழ் இலக்கிய மன்ற விழா 27-05-2022 அன்று நடைபெற்றது. பேரா. ஞானதீபன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வெ. மனோகரன் சிறப்பாக இவ்விழாவினை நடத்தினார்.

**ஆங்கிலத்துறை**யின் சார்பில் ஆங்கில மொழிநாள் 28-04-22 அன்று கொண்டாடப்பட்டது. முனைவர் கீர்த்தி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

சேலம் சாரதா கல்லூரியில் 22,23-04-22 ஆகிய நாட்களில் நடைபெற்ற இருநாள் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சியில் 14 மாணவர்களுடன் இத்துறைப் பேராசியர் சா.மேபல் சொரூபராணி பங்கேற்றார்.

**வரலாற்றுத்துறை** மாணவர்கள் இத்துறை உதவிப்பேராசியர் முனைவர் க.மா.வெங்கடேசன் அவர்களுடன் சங்ககிரி மலையில் 24-02-22 அன்று வரலாற்றுக் களப்பயிற்சி மேற்கொண்டனர். கோட்டை, கருவூல வைப்பகம், கொத்தளம், இயற்கைச்சூழல் கோயில்கள், தர்காக்கள் ஆகியவற்றைக் கண்டு பயின்றனர்.

**கணிதத்துறை** சார்பில் 14-03-22 அன்று பைடே சிறப்புறக் கொண்டாடப்பட்டது. சித்தோடு வாசவி கல்லூரி பேராசிரியர் முனைவர் கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். மாணவர்கள் உரை, கலந்துரையாடல் என ஆசிரியர் க.கு.சுமதி அவர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

**பொருளறிவியல் மற்றும் உயிரறிவியல் துறை**களின் சார்பில் தேசிய அறிவியல் தினம் 12-04-22 அன்று கொண்டாடப்பட்டது. சேலம் கல்லூரி பேராசிரியை முனைவர் சி.ரூமானா "நீடித்த வளர்ச்சிக்கு அறிவியலின் பங்களிப்பு " என்ற தலைப்பில் உரையாற்றினார். வினாடி வினாப் போட்டிகள் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன. முனைவர் மா. அருணாசலம் மற்றும் முனைவர் சு.வைரமணி ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

**தேசிய மகளிர் நாள்** 08-03-22 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.ஆ.ரேணுகா அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

**நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு ஒருநாள்** பயிற்சி மற்றும் கண்காட்சி 24-01-22 அன்று நடைபெற்றது. நுகர்வோர் விழிப்புணர்வு கருத்துக்களை திரு. ஆர். சண்முகம்



Scanned with CamScanner

அவர்களும்,தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்களின் கூட்டமைப்புச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்ரமணியன் அவர்களும் வழங்கினார்கள்.

**நுண்கலைமன்றம்** சார்பில் 13 போட்டிகள் ஏப்ரல் மாதத்தின் பல்வேறு நாட்களில் நடத்தப்பட்டன. ஆடை அலங்கார அணிவகுப்பு, சிகை அலங்காரம், ரங்கோலி, முகஓவியம், நடிப்பு,நடனம், பாட்டு,சமையல்,கைவினைப்பொருட்கள் தயாரித்தல் ஆகிய பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு ஆண்டுவிழாவுடன் இணைந்து நடத்தப்பட்ட நுண்கலை விழா நிகழ்வில் பரிசளிக்கப்பட்டது.

**கைவினைப்பயிற்சி** ஒருநாள் முகாம் 24-05-22 அன்று நடைபெற்றது. திரு. எஸ்.பழனிவேலு அவர்கள் சிறப்பான பயிற்சி அளித்தார்.

இக்கல்லூரி பசுமை வளாகமாகத் திகழ்கிறது பல்வேறு வளர்ச்சி நிலைகளை எட்டியுள்ளது. இதற்காக உழைத்த உழைக்கின்ற அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரியில் கல்லூரி ஆண்டுவிழா (31-05-2022) காலை 10.00 மணிக்குத் தொடங்கி நடைபெற்று வருகிறது.

கல்லூரி முதல்வர் முனைவர்.அ.ஜான் பீட்டர் தலைமை ஏற்றார். கணிதவியல் பேராசிரியர் முனைவர் செ. லட்சுமி நாரயணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் தருமபுரி மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் நா. இராமலட்சுமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். முன்னதாக கல்லூரி வளாகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 75 ஆம் ஆண்டு சுதந்திர அமுதப்பெருவிழா நினைவு கொடிமரத்தை திறந்துவைத்து தேசியகொடி ஏற்றினார். கல்லூரி வளாக வரைபடம் அமைக்கப்பட்ட பதாகையையும் அவர் திறந்து வைத்து வாழ்த்திப்பேசினார்.

குமாரபாளையம்
31-05-2022

முனைவர் **அ.ஜான்பீட்டர்**
முதல்வர்.

## கண்ணீர் அஞ்சலி



முனைவர் **செ. பார்த்திபன்**
இணைப் பேராசிரியர் - ஆங்கிலத்துறை



திரு. **வேலப்பன்**
ஆய்வக உதவியாளர்



Scanned with CamScanner

## கல்லூரி நாள் விழா – 2022

















Scanned with CamScanner




கல்லூரியில் மாணவர்களை இணைத்தல் விழா 20-10-21



புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



கண், பல் பொது மருத்துவப் பரிசோதனை முகாம்




உலக மகளிர் தினவிழா



Scanned with CamScanner

## கல்விச் சுற்றுலா







இராமேஸ்வரம்,
தனுஷ்கோடி,
பாம்பன்பாலம்,
கீழடி,
மதுரை,
கொடைக்கானல்
ஆகிய இடங்களுககு இரு நாட்கள்
மேற்கொள்ளப்பட்ட கல்விச்சுற்றுலா



Scanned with CamScanner

சிறப்புப் பள்ளிகளைப்பார்வை இடுதல் - நேரு நினைவு சம்பூரணியம்மாள் மாற்றுத்திறனாளிகள் மேல்நிலைப்பள்ளி



2020 - 2022 மாணவர்கள்
பார்வையிட்ட நாட்கள்
11-10-2021
12-10-2021
13-10-2021

2021 - 2023 மாணவர்கள்
பார்வையிட்ட நாட்கள் :
29.03.2022
30.03.2022





மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பரிசு பெறும் மாணவி




NAAC பணிப்பட்டறை - பேரா.பி.மாரியப்பன்



Scanned with CamScanner

# உடற்கல்வித்துறை ஆண்டறிக்கை

2021-22 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுக்குழுவானது கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைவராகவும் உடற்கல்வி இயக்குநர் முனைவர் மொ.ரவி ஆகிய நான் செயலராகவும். செல்வன் ஞா.சூர்யா அவர்கள் இரண்டாமாண்டு மாணவச் செயலராகவும், செல்வி எஸ். கீர்த்தனா அவர்கள் இரண்டாமாண்டு மாணவ துணைச்செயலராகவும். செல்வன் ஆர்.விக்னேஸ்வரன் அவர்கள் முதலாமாண்டு மாணவச் செயலராகவும், செல்வன் எஸ்.ராஜா அவர்கள் முதலாமாண்டு மாணவ துணைச் செயலராகவும், உள்ளடக்கி மிகச்சிறப்பாக செயல்பட்டது.

இக்கல்லூரியில் அனைத்து மாணவ-மாணவியர்களுக்கும் தடகளம்,கேரம், சதுரங்கம், கபாடி, கையுந்துப்பந்து, கூடைப்பந்து, எறிப்பந்து, இறகுப்பந்து, வலையப்பந்து போன்ற விளையாட்டுக்கள் பயிற்சியளிக்கப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அன்று மாலை 03.00 மணி முதல் 04.30 மணி வரை முதலாமாண்டு மாணவ மாணவியர்களுக்குச் சிறப்பு யோகப் பயிற்சி வழங்கப்பட்டது.

இக்கல்லூரியில் மதிலகப்போட்டிகள் கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையில் 05-04-2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு 30-04-2022 வரை ஒவ்வொரு நாளும் மாலை 02.00 மணி முதல் 04.30 மணிவரை நடைபெற்று மாணவ மாணவியர்களுக்கு தனித்தனியே நாள்வீதம் ஒரு விளையாட்டு என்ற முறையில் கேரம், சதுரங்கம், கபாடி, கையுந்துப்பந்து, கூடைப்பந்து, எறிப்பந்து வலையப்பந்து போன்ற பல்வேறு போட்டிகள் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது.

தடகள விளையாட்டுப்போட்டிகளில் மாணவ மாணவியர்களுக்குத் தனித்தனியே 100மீ, 200மீ, 400மீ, 800மீ, 1500மீ, 4X100மீ, 4X400 மீ தொடரோட்டம், நீளம் தாண்டுதல்,உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல் போன்ற போட்டிகளும் மாற்றுத்திறனாளிகளுக்குக் குண்டு எறிதல் மற்றும் தட்டு எறிதல் போட்டிகளும் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டும் கல்லூரி அளவில் வெற்றி பெறும் மாணவ மாணவியர்களுக்குத் தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் சார்பாக மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படும். ஆனால் கடந்த இரு ஆண்டுகள் கொரானா பெருந்தொற்று காரணமாக மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படவில்லை.

இக்கல்வியாண்டில் (2021-2022) இக்கல்லூரியில் நடத்தப்பட்ட அனைத்து வகையான மதிலக விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஆலோசனை வழங்கி உறுதுணையாக இருந்த கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், அனைத்துப் பேராசியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் மாணவ மாணவியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விளையாட்டு ஆண்டறிக்கையை நிறைவு செய்கிறேன்.

29-5-2021

முனைவர் **மொ.ரவி**
உடற்கல்வி இயக்குநர்



Scanned with CamScanner

## விளையாட்டு விழா

















Scanned with CamScanner



**உள்ளரங்கப்போட்டிகள்**
(ஆண்கள்/பெண்கள்)

- கேரம்
- சதுரங்கம்

**தடகளப் போட்டிகள்**
(ஆண்கள்/பெண்கள்)

- 100, 200, 400,800, 1500 மீ ஓட்டம்
- 4x100,4x400 மீ தொடரோட்டம்
- நீளம் தாண்டுதல்
- உயரம் தாண்டுதல்
- குண்டு எறிதல்
- தட்டு எறிதல்
- ஈட்டி எறிதல்





**அணிப் போட்டிகள்**
(ஆண்கள்/பெண்கள்)

- கபாடி
- கையுந்து போட்டி
- கூடைப்பந்து
- எறிப்பந்து
- வளையப்பந்து
- இறகுபந்து

**மாற்றுத்திறன் மாணவர்களுக்கான போட்டிகள்**
(ஆண்கள்/பெண்கள்)

- குண்டு எறிதல்
- தட்டு எறிதல்





Scanned with CamScanner

# கல்லூரியுடன் இணைந்த விடுதி அறிக்கை

நமது கல்லூரியில் இருபாலருக்குமான விடுதிகள் கல்லூரி வளாகத்தின் உள்ளே அமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. விடுதியின் காப்பாளராக முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்களும், விடுதியின் துணைக்காப்பாளராக முனைவர் க.மா.வெங்கடேசன் உதவிப்பேராசிரியர் அவர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

கல்லூரி விடுதியில் 2021-22 ஆம் கல்வியாண்டில் ஆண்கள் விடுதியில் (குறிஞ்சி) இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 6 பேர் மற்றும் முதலாமாண்டு மாணவர்கள் 23 பேர் மொத்தம் 29 மாணவர்களும் பெண்கள் விடுதியில்( காவேரி ) இரண்டாமாண்டு மாணவிகள் 31 பேர் மற்றும் முதலாமாண்டு மாணவிகள் 26 பேர் மொத்தம் 57 மாணவிகளும் தங்கியுள்ளனர்.

இரு விடுதிகளிலும் பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

- முதல்வர் அவர்களின் முயற்சியினால் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளுக்குப் புதிதாக பெயரிடப்பட்டன. முறையே குறிஞ்சி இல்லம் மற்றும் காவேரி இல்லம் எனப் பெயரிடப்பட்டது.
- இரு விடுதிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி (RO) ஏற்படுத்தப்பட்டது. இத்துடன் வெந்நீர் தேவையை நிறைவு செய்வதற்காகக் கெட்டில்கள் இரு விடுதிகளுக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.
- இரு விடுதிகளுக்கும் தனித்தனியாக வளாகத் தூய்மைப் பணிக்காக வேலை ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மாணவர்கள் நலனுக்காக விடுதி சமையல் அறைக்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் ஏறக்குறைய ரூபாய் 15,000/- செலவில் புதிதாக வாங்கப்பட்டுள்ளது.
- மாணவ மாணவிகளின் வருகையை உறுதி செய்ய விடுதியை விட்டு வெளியே செல்லும் போதும் மீண்டும் உள்ளே வரும்போதும் இணையதள வருகைப்பதிவேடு பராமரிக்கப்படுகிறது.
- மாணவ மாணவிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பல்வேறு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் மாணவ - மாணவிகள் தனித்தனியே வெளியே சென்றுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செல்லும்போது மின்னணு வருகை பதிவேட்டில் குறிப்பிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- விடுதி மாணவ மாணவிகளின் தேவைகள் மற்றும் குறைகளைக் கண்டறிய மாதமொருமுறை குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.
- பெண்கள் விடுதிக்கு அருகில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டு விடுதி மாணவிகளால் பராமரிக்கப்படுகிறது.

விடுதி உணவு ஒப்பந்தத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டது புதிய ஒப்பந்ததாரர் நியமனம் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை சைவ உணவுகள் மட்டும் வழங்கப்பட்டு வந்த நிலையில் மார்ச் 2022 முதல் அசைவ உணவுகள் ( மாதம் இருமுறை கோழிக்கறி மற்றும் வாரம் இருமுறை கோழி முட்டை ) வழங்கப்படுகிறது.

முனைவர் **க.மா.வெங்கடேசன்**
விடுதி துணைக்காப்பாளர்



Scanned with CamScanner

# விடுதி விழா





**HIGH LIGHTS**

- Moon Supper
- Camp Fire
- Ambient lighting

**HIGH LIGHTS**

- பாடல்கள்
- நடனங்கள்
- நெகிழ்வுரைகள்







Scanned with CamScanner

## எட்டாவது பன்னாட்டு யோகா நாள் விழா - மருத்துவ முகாம் அறிக்கை

இக்கல்லூரியில் செயல்படும் கல்லூரி தரஉறுதி குழு (IQAC) உடற்கல்வித்துறை மற்றும் ஈரோடு வாசன் கண்நல மருத்துவமனை, ஈரோடு பி வெல் மருத்துவமனை (Be well Hospital ) ஆகிய அமைப்புகள் இணைந்து எட்டாவது பன்னாட்டு யோகா நாள்விழா கொண்டாடப்பட்டது.

கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் தலைமை ஏற்க பீ வெல் மருத்துவமனையின் மருத்துவர் டாக்டர். மெய்.எஸ்.அப்பச்சி எம்.டி., அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பவானி, ஸ்ரீ கலா பல் மருத்துவமனையின் பல் மருத்துவர் டாக்டர்.ஏ.ஆர்.மணிகண்டன் பல் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்தும் சமூகப்பணியாளர் டாக்டர். ஆர்.சதாசிவம் அவர்கள் சமூக நல விழிப்புணர்வு குறித்தும் உரையாற்றினர். ஈரோடு விவேகானந்தா ஹெல்த் சென்டர் மனநல மருத்துவர் டாக்டர்.ஈ.எஸ்.எம்.சரவணன் மனநலம் பற்றிய ஊக்க உரை நிகழ்த்தினார்.

உடல் பரிசோதனை ( இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு) பல் மருத்துவப் பரிசோதனை, கண்மருத்துவப் பரிசோதனை மற்றும் பொது மருத்துவப் பரிசோதனை ஆலோசனை ஆகியன கல்லூரி அனைத்து 200 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

நிகழ்வில் முன்னதாக முனைவர் மா. அருணாசலம் அவர்கள் வரவேற்புரையும், முனைவர்.வெ.மனோகரன்அவர்கள் அறிமுகவுரையும் இறுதியாக முனைவர்.க.மா.வெங்கடேசன் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர்.

முனைவர் **மொ.ரவி**
உடற்கல்வி இயக்குநர்

முனைவர் **க.மா.வெங்கடேசன்**
IQAC ஒருங்கிணைப்பாளர்









Scanned with CamScanner

## நுண்கலை மன்றம் அறிக்கை

நுண்கலை மன்றத்தின் சார்பாக 13 விதமான போட்டிகள் நடைபெற்றன அப்போட்டிகள் அனைத்திற்கும் கல்லூரி முதல்வர் தலைமை ஏற்று மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி மிகச் சிறப்பாக தொடங்கி வைத்தார். மேலும் போட்டிகளின் ஒருங்கிணைப்பாளர்களாகப் பேராசிரியர்கள் முனைவர் ஹெலன் எட்வெர்டு, உதவி பேராசிரியர் திருமதி சா.மேபல் சொரூபராணி மற்றும் கௌரவ விரிவுரையாளர் திருமதி.கு.க.சுமதி ஆகியோர் செயல்பட்டனர். கல்லூரியின் அனைத்து பேராசியர்களும் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்தி கொடுத்தும் பல்வேறு போட்டிகளுக்கு நடுவர்களாக இருந்தும் சிறப்பாகச் செயல்பட்டு மாணவர்களின் திறமைகளை மதிப்பீடு செய்து ஊக்கப்படுத்தினார்கள்.

10.06.2022 அன்று ரங்கோலி, முக ஓவியம், இசைக்கருவி வாசித்தல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. அதில் 52 மாணவர்கள் கலந்து கொண்டனர். அடுத்ததாக 11.08.2022 அன்று நடைபெற்ற சிகை அலங்காரம்,மருதாணி இடுதல்,ஆடை அலங்காரம் அணிவகுப்புப் போட்டிகளில் 36 மாணவர்கள் கலந்து கொண்டனர். மேலும் மூன்றாம் நாளாக 12.05.2022 அன்று பாட்டுப் பாடுதல் ( தனி மற்றும் குழு) மற்றும் நாட்டியம் ( தனி மற்றும் குழு) போட்டிகளில் 36 மாணவர்கள் கலந்து கொண்டனர். நான்காம் நாளாக 13.05.2022 அன்று தனி நடிப்பு, ஊமை நாடகம், நாடகம் ஆகிய போட்டிகளில் 55 மாணவர்கள் பங்கேற்றனர். 26.05.2022 அன்று உணவு சமைத்தல் ( நெருப்புடன் மற்றும் நெருப்பில்லா) போட்டியில் 28 மாணவர்கள் பங்கேற்று நமது பாரம்பரிய உணவுகளை மிகச் சிறப்பாகச் சமைத்து வியப்பில் ஆழ்த்தினர். இறுதியாக 27.05.2022 அன்று தேவையற்ற பொருட்களைப் பயன்படுத்திக் கலை மற்றும் கைவினைப்பொருட்கள் தயாரித்தல் போட்டி நடைபெற்றது இதில் 10 மாணவர்கள் பங்கேற்றனர். குமாரபாளையம் நகராட்சி ஆணையர் திரு. விஜயகுமார் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

அனைத்துப் போட்டிகளையும் மிகச் சிறந்த முறையில் நடந்திட திருமதி.சௌந்தர்யா ஆங்கிலத்துறை (இரண்டாம் ஆண்டு) செல்வி.ப.செ.பவித்ரா பொருளறிவியியல் துறை ( இரண்டாம் ஆண்டு) மற்றும் க.சக்திவேல் பொருளறிவியியல் துறை ( முதலாமாண்டு) ஆகியோர் உதவியாக இருந்தனர்.

முனைவர் **சா.மேபல் சொரூபராணி**
நுண்கலை மன்றத் துணைத்தலைவர்



வெற்றி பெற்றவர்களுக்கு
பரிசு வழங்குதல்

சிறப்பு விருந்தினர்
குமாரபாளையம் நகராட்சி ஆணையர்
திரு.விஜய்குமார் அவர்கள்





Scanned with CamScanner

## நுண்கலைப் போட்டிகள்





- ✣ Rangoli
- ✣ Face Painting
- ✣ Mehanthi
- ✣ Hair Dressing
- ✣ Fashion Parade

- ✣ Cooking with Fire
- ✣ Cooking without Fire
- ✣ Playing Musical Instruments
- ✣ Songs solo and Groups
- ✣ Dance solo and Groups
- ✣ Mime
- ✣ Mono Acting
- ✣ Drama









Scanned with CamScanner

**தகவல் தொழில்நுட்ப கழகம்**

கல்லூரியில் செயல்பட்டு வரும் தகவல் தொழில்நுட்ப கழகத்தில் நமது கல்லூரியின் ஆசிரியர்கள் பல்வேறு தலைப்புகளில் மாணவர்களுக்கு தேவையான இணையவழியான கற்றல் கற்பித்தல் பற்றிய நுணுக்கங்களையும், செயல்முறைகளையும் தகவல் தொழில்நுட்ப ஆய்வகத்தில் பயிற்சியாகவும் வகுப்பறைகளில் விரிவுரை முறையிலும் கற்பித்து அனைத்து மாணவர்களும் கணினியிலும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் ஆசிரியர் மாணவர்களை மேம்படுத்தினர்.

**பணியமர்த்தும் பிரிவு** (Placement Cell)

15-3-2022&11-5-2022 தேதியில் கல்லூரியில் செயல்பட்டுவரும் பணியமர்த்தும் பிரிவினால் ஏ.வி.எஸ்.மெட்ரிக்குலேசன் பள்ளி மற்றும் டெலன்ட் மெட்ரிகுலேசன் பள்ளி ஆகிய 2 பள்ளிகளில் இருந்து நமது கல்லூரியிலேயே வளாக நேர்காணல் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் சிறப்பாக பங்கேற்று அதில் 10-க்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் பள்ளிகளில் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

**கல்லூரி வளாக வரைபடம்**

கல்லூரி வளாகம் 9 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பரப்பில் அமைந்துள்ள முதன்மைக் கட்டிடம், விடுதியின் மாணவர் இல்லமாகிய குறிஞ்சி இல்லம் மாணவியர் விடுதியான காவிரி இல்லம், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு கட்டிடம், அண்ணா நுற்றாண்டு கட்டிடம், கருத்தரங்கம், ஊழியர் குடியிருப்பு, விளையாட்டு மைதானம் ஆகியவற்றைக் கூகுள் மேப் உதவியால் தயாரித்து கல்லூரி வளாக முகப்பில் அழகுற அமைக்கப்பட்டது.

கல்லூரி கல்வி இணை இயக்குனர் முனைவர் நா.இராமலெட்சுமி அவர்கள் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் 30-5-2022 அன்று திறந்து வைத்தார்.



இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு வழியனுப்பு விழா



பேரவை நிறைவு விழா சிறப்பு விருந்தினர் குமாரபாளையம் நகராட்சித் தலைவர் திரு.விஜய்கண்ணன் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்குதல்



Scanned with CamScanner

# தமிழ் இலக்கிய மன்ற விழா

27-05-2022 அன்று கல்லூரிக் கலை அரங்கில் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான்பீட்டர் அவர்கள் தலைமையில் தமிழ் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது.

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியரும் துறை தலைவருமான முனைவர் வெ.மனோகரன் அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து உரை ஆற்றினார். குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சு.ஞானதீபன் வான்தமிழ் உணர்த்தும் வாழ்வியியல் இரகசியங்கள் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

முன்னதாக இரண்டாமாண்டு தமிழ்மன்றச் செயலாளர் செல்வி ந.சுவாஷினி வரவேற்புரை ஆற்றினார். இரண்டாமாண்டு மாணவர் ஆ.தங்கராசு கவிதை வாசித்தார். முதலாமாண்டு தமிழ் மன்ற செயலாளர் கு.நவின் நன்றியுரை வழங்கினார்.

முனைவர் **வெ. மனோகரன்**
தமிழ்துறைத் தலைவர்



## கல்வி உதவித்தொகை 2021 -2022

நமது கல்லூரியில் பிற்படுத்தபட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கான உதவித் தொகைகள் தகுதியுள்ள மாணவர்களுக்குப் பெற்று வழங்கப்படுள்ளனர். 2021-2022 கல்வியாண்டில் 150 மாணவர்களுக்கு பெற்று வழங்கப்பட்டது.

| | வகுப்பு | மாணவர்கள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | முதலாமாண்டு | 70 | 3.91.850/- |
| | இரண்டாமாண்டு | 60 | 3.33.075/- |
| தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் | முதலாமாண்டு இரண்டாமாண்டு | 20 | 2.11.820/- |
| | | மொத்தம் | 9.36.745/- |



Scanned with CamScanner

## English Department Report

English language day is commonly celebrated on 23rd April. This was chosen because it is thought to be Shakespeare's birthday and the anniversary of his death as well as being the English Language most famous playwright Shakespeare also had a huge impact on modern day English.

In our institution under the guidance of our Principal Dr. A.John Peter the department of English decided to celebrate that day on 28th April 2022. Department of English conducted a drawing competition titled on " **All the world a stage**" for student teachers of remaining departments. The faculty members of all departments, non teaching staff and student teachers from first and second year were seated in seminar hall. The programme was started with Tamilthaivalzhu. K.Indumathi from II year welcomed all the gatherings. Our principal honoured the chief guest Dr. Keerthi, Assistant Professor, Department of English, Government College of Arts and Science, Komarapalayam. Our principal sir gave the presidential Address. The faculty of English Dr. S. Mabel Soruba Rani introduced the chief guest.

The chief guest delivered her special address on " **All the world's a stage**". She gone interior unit and explained about the Shakespeare's plays, quotes,poems and his works on stage. She mentioned his famous quotes " **You to Brutus**" from Julius Caesar and also converged us to assess the language and literature.

End of the special address student teachers performed mime on Romeo Juliet and Soliloquy from Twelfth Night. K.R.Madhumitha I year student thanked all the gatherings. The programme ended wih National Anthem.

Dr. **S. MABEL SORUBA RANI**
Head of the Department English






Scanned with CamScanner

**கணிதத்துறை அறிக்கை**

நம் கல்லூரியில் குமாரபாளையத்தில் 14.3.2022 திங்கட்கிழமை அன்று பிற்பகல் 3.00முதல் 4.30 மணிவரை கருத்தரங்க அறையில் (π) (பை) தினவிழா கணிதத்துறையின் சார்பில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிமையாகத் தொடங்கியது. விழா கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக ஈரோடு ஸ்ரீ வாசவி கலை மற்றும் அறிவியல் கல்லூரி கணிதத்துறை உதவி பேராசிரியர் முனைவர் ப.கார்த்திகேயன் அவர்கள் பங்கேற்றார். நமது கல்லூரி கணிதத்துறையின் தலைவர் முனைவர் செ.லெட்சுமிநாராயணன் மற்றும் திருமதி கு.க.சுமதி உதவி பேராசிரியர் அவர்களும்,இக்கல்லூரியில் பணியாற்றும் அனைத்து பேராசிரியர்களும், அனைத்து மாணவ மாணவிகளும் பங்கேற்றனர்.

இவ்விழாவில் முதலாம் ஆண்டு மாணவன் சு.கோபிநாத் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினருக்குக் கல்லூரி முதல்வர் அவர்கள் நினைவு பரிசுகளை வழங்கினார். கல்லூரி முதல்வர் அவர்கள்(π) (பை) குறியீடு கொண்ட மாதிரியை வெட்டி விழாவை தொடங்கி வைத்தார். மாணவர்களின் சிறு முயற்சியால் குழுக்கள் போட்டியில் அதிர்ஷ்டசாலியாக ஞா.சூர்யா இரண்டாம் ஆண்டு மாணவனை தேர்ந்தெடுத்து லோகோவைத் திறந்து வைத்தனர். இதனைத் தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் தலைமை உரை வழங்கினார். அதன்பிறகு சிறப்பு விருந்தினர் அவர்கள் (π) தினத்தைப் பற்றியும், கணிதத்தின் தொடர்பினைப் பற்றியும் வாழ்வியல் கணிதத்தைப் பற்றியும் சிறப்புரை வழங்கினார்.

இரண்டாம் ஆண்டு மாணவி க.உமாமகேஸ்வரி மற்றும் கோ.மௌனிகா அவர்கள் பாராட்டு உரை வழங்கினார். முதலாம் ஆண்டு மாணவன் யோ.சீனிவாசன், கார்த்திக் மற்றும் பி. கீர்த்திகா அவர்கள் விளக்க கேள்வி காட்சிகள் வழியாகச் சிறு விளையாட்டை நடத்தி உற்சாகப்படுத்தினர். இறுதியாக இரண்டாம் ஆண்டு மாணவன் ச.ப.லோகேஷ் நன்றியுரை வழங்கினார்.

**முனைவர் செ.லெட்சுமி நாராயணன்**
**கணிதத்துறைத் தலைவர்**






Scanned with CamScanner

## உயிரறிவியல் பொருளறிவியல் துறை அறிக்கை

**தேசிய அறிவியல் தினம்** - தேதி : 12-04-2021

நமது கல்லூரியில் தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தனர். முனைவர் திரு. எம்.அருணாசலம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு உயிரறிவியல் துறை மாணவர்கள் தயாரித்த அறிவியல் நாட்குறிப்பேட்டினை முதல்வர் அவர்கள் வெளியிட, சிறப்பு விருந்தினர் பெற்றுக்கொண்டார்,

சிறப்பு விருந்தினர் சேலம் அரசு கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் ருமானா அவர்கள்அறிவியல் தின சிறப்புரை ஆற்றினார் பின்பு மாணவர்களுக்கு மரங்கள் மற்றும் தண்ணீர் மேலாண்மை பாடல்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாணவர்களுக்கு வினாடி-வினா நிகழ்ச்சி மற்றும் அறிவியல் கண்காட்சி போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்கள் பெயர் அறிவிக்கப்பட்டது அறிவியல் அறிஞர்களின் காணொளிக்காட்சி மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டது. முனைவர் எஸ்.வைரமணி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**மாநில-ஆயுஷ் சித்தா விழிப்புணர்ச்சி நிகழ்ச்சி** - தேதி : 25-5-2021

மாநில-ஆயுஷ் சித்தா விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி கலையரங்கில் கல்லூரி முதல்வர் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றச்சூழல் மன்ற பொறுப்பாளர் முனைவர் எஸ். வைரமணி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப்பேசினார்.

கொக்கராயன்பேட்டை டாக்டர். க.ராதாகிருஷ்ணன், குமாரபாளையம், அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர். சுகந்தி, படைவீடு, அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர்.கணியன் மற்றும் இலந்தக்குட்டை, அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர். வெங்கட்பிரகாசம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். சித்தமருத்துவம் பற்றிய பாடல் காணொளி மாணவர்களுக்கு காட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கல்லூரி உதவிப்பேராசிரியர் திரு. எஸ்.சின்னப்பராஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார் நிகழ்ச்சி நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.

முனைவர் **சு.வைரமணி**
உயிரறிவியல் துறைத்தலைவர்

முனைவர் **மா.அருணாச்சலம்**
பொருளறிவியல் துறைத்தலைவர்






Scanned with CamScanner

## வரலாற்றுத்துறை அறிக்கை

வரலாற்றுத் துறையில் முதலாமாண்டில் 08 மாணவர்களும், இரண்டாமாண்டில் 06 மாணவர்களும் பயின்று வருகின்றனர். எமது வரலாற்றுத் துறை வகுப்பறை நவினமயமாக்கப்பட்ட வசதிகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த கனிணி மற்றும தொழில்நுட்பம் மூலம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஆன்லைனில் கூகுல் வகுப்பறை உருவாக்கப்பட்டு அதன் மூலம் வகுப்பறை செயல்பாடுகளின் அறிவிப்புகள் ஒப்படைப்புகள் சமர்ப்பித்தல் தேர்வுகள் நடத்துதல் மற்றும் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்குதல் போன்றன செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


**வரலாற்றுத்துறை களப்பணிகள் :**

"வரலாற்றின் மெய்யறிவு பழமையைக் கண்டுணர்தல்" என்ற கூற்றிற்கு வலுச்சேர்க்கும் விதமாக எமது துறையில் 24-02-2022 அன்று கல்லூரிக்கு அருகில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சங்ககிரி மலைக்கோட்டைக்கு ஒருநாள் களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் மூத்த பேராசிரியர் முனைவர் மா.அருணாசலம் மற்றும் துறைத்தலைவர் முனைவர்.க.மா.வெங்கடேசன் ஆகியோரின் மேற்பார்வையில் வரலாற்றுத்துறை இரண்டாம் மற்றும் முதலாமாண்டு மாணவர்களுடன் களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. முதலாமாண்டு மாணவச் செயலாளர் து.அகத்தியா, ம.சசிகுமார் மற்றும் க.மெய்யப்பன் ஆகியோர் சிறப்பான முன்னேற்பாடுகளைச் செய்தனர். காலை 9.00 மணியளவில் களப்பயணம் தொடங்கியது. தொடக்கத்தில் மாணவர்கள் மலையேறும்போது பின்பற்றவேண்டிய பாதுகாப்பு அம்சங்களை முதல்வர் விளக்கி கூறினார்.

தொடர்ந்து 09.30 மணிக்கு மலையேற்றம் தொடங்கியது. களப்பயணத்தின் போது கோவில்கள், மசூதி, கோட்டை, மதில் சுவர்கள், சிற்பங்கள் பல்வேறு காலகட்டத்தில் அமைக்கப்பட்ட கடவுள்களின் உருவங்கள், ஆயுத கிடங்குகள்,உணவு சேமிப்பு அறைகள், கண்காணிப்பு இடங்கள் நீரூற்றுகள், நீர் சேமிப்பு இடங்கள் பசுமையான காடுகள் மற்றும் அறியவகை தாவரங்கள் ஆகியவற்றை கண்டு மாணவர்கள் மகிழ்ச்சியுற்றனர்.

மாணவர்களின் அறிவை வலுப்படுத்தும் வகையில் வரலாற்று நினைவுச் சின்னங்களை நேரடியாக கண்டுணரும் வாய்ப்பை களப்பயணம் அமைத்துக்கொடுத்தது.

முனைவர் **க.மா.வெங்கடேசன்**
வரலாற்றுத்துறைத் தலைவர்





Scanned with CamScanner

## சுற்றுச்சூழல் மன்ற அறிக்கை

**கல்லூரிக்கு செடிகளை பரிசளித்தல்** - நாள்: 28-08-2021

நமது கல்வியியல் கல்லூரியின் சுற்றுப்புறச்சூழல் மன்றம் சார்பாக, சுற்றுப்புறச்சூழல் சங்கத்தின் செயலாளரும், ஒருங்கிணைப்பாளரும் ஆகிய முனைவர் எஸ். வைரமணி அவர்கள் ரூபாய் 5500/- பெறுமான புதியவகை செடிகளைக் கல்லூரிக்கு வழங்கினார் கல்லூரியின் முதல்வர் அவற்றைப் பெற்றுக்கொண்டார். மாணவர்கள் அச்செடிக்கன்றுகளை கல்லூரி வளாகத்தில் நட்டுவைத்து பராமரித்து வருகின்றனர்.

**புகையில்லா தீபாவளி கொண்டாடுதல்** - நாள்: 28-10-2021

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரி சுற்றச்சூழல் மன்றம் சார்பாக அறிவியியல் மாணவர்களுக்கு புகையில்லா தீபாவளி எப்படிக் கொண்டாடுவது என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குமாரபாளையம் தீயணைப்பு படை காவலர்களும் விபத்தில்லா தீபாவளி எவ்வாறு கொண்டாடுவது வீடுகளில் எரிவாயு உருளை தீப்பிடித்தால் எவ்வாறு அணைப்பது என்பது உள்ளிட்ட தீ விபத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளித்து மாணவர்களுக்குகிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர் கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்றார். சுற்றுச்சூழல் சங்க செயலாளர் முனைவர் திருமதி.எஸ்.வைரமணி நன்றி கூறினார். அனைத்து முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு கல்வியியல் மாணவர்களுக்கும் புகையில்லா தீபாவளி பற்றிய விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

**விதைப்பந்து தயாரித்தல்** - தேதி : 29-10-2021

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரியில் விதைப்பந்து தயாரித்தல் எப்படி என்பது செயல்முறை விளக்கத்துடன் விளக்கப்பட்டது. உயிர் அறிவியல் துறை உதவிப் பேராசிரியை முனைவர் திருமதி. எஸ். வைரமணி அவர்கள் விதைப்பந்து தயாரிப்பது எவ்வாறு என்பதை மாணவர்களுக்கு செயல்முறை விளக்கம் அளித்தார். கல்லூரி மாணவர்கள் சுமார் 2,500 விதைப்பந்துகள் தயாரித்தனர்.மழைக்காலமாக இருப்பதால் விதைப்பந்துகள் வீசப்படும் பொழுது அவை ஆங்காங்கே முளைத்து மரமாகும் என்ற கருத்தின் அடிப்படையிலும் மரங்களின் முக்கியத்துவம் மற்றும் மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. 2500 புதிதாக விதைப்பந்துக்கள் உருவாக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் விதைப்பந்து தயாரித்த அனைத்து மாணவர்களையும் பாராட்டினார்.

**சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு போட்டிகள்** - தேதி : 29-10-2021

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் சங்கம் சார்பாக விழிப்புணர்வு போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, குறும்படம் தயாரித்தல், முழக்கம் எழுதுதல், படவிளக்க காட்சி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது போட்டிகளை கல்லூரி முதல்வர் தொடங்கி வைத்தார். சுற்றுச்சூழல் சங்க செயலாளர் அனைவரையும் வரவேற்றார் கல்லூரி பேராசியர்கள் நடுவர்களாக இருந்து மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கினர் வெற்றிபெற்ற மாணவர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. மாணவர்களுக்கு போட்டிகள் மூலமாக சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இரண்டாம் ஆண்டு மாணவி வி.சிந்து நன்றி கூறினார் விழா இனிதே முடிந்தது பங்கு பெற்ற மாணவர்களில் 48 மாணவர்கள் போட்டிகளில் கலந்து வென்று



Scanned with CamScanner

வெற்றிவாகை சூடினர்.

**மருத்துவ குணம் கொண்ட மூலிகை செடிகள் கல்லூரிக்கு வழங்குதல்** - தேதி : 09-11-2021

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரிக்கு குமாரபாளையம் அரசு மருத்துவர்கள் மருத்துவ குணம் கொண்ட மூலிகை செடிகளை வழங்கினர். கல்லூரி முதல்வர் அவர்கள் அனைத்து அரசு மருத்துவர்களையும், செவிலியர்களையும் வரவேற்றார். மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்காகவும், அதைப்பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் மூலமாகவும் மூலிகைத் தோட்டம் கல்லூரி வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டு அதில் மூலிகைச் செடிகளை வைத்து மாணவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சுற்றுப்புற சூழல் செயலாளர் எஸ். வைரமணி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**விதைப்பந்துக்கள் வழங்கும் விழா**- தேதி : 15-11-2021

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரியில் விதைப்பந்துக்கள் வழங்கும் விழா நடைபெற்றது. நம் கல்லூரியின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தயாரித்த விதைப் பந்துகளை கோவை திரு. எஸ்.கனகராஜ் அவர்கள் நேரில் பெற்றுக்கொண்டார். கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்றார். கோவை திரு. எஸ்.கனகராஜ் அவர்களிடம் மாணவர்கள் தயாரித்த விதைப்பந்துகள் வழங்கப்பட்டன. பின்னர் திரு.எஸ்.கனகராஜ் அவர்கள் கல்லூரிக்காக 200பனை மர விதைகள் அளித்தார். பின்பு மரம் நடுதலும்,மரங்களை வேரோடு அகற்றி வேறு இடத்தில் நட்டு மறுபடியும் அதனை வளர்க்க முடியும் என்ற கருத்துக்களை காணொளி வாயிலாக மாணவர்களுக்கு வழங்கினார். முனைவர் திருமதி.சு.வைரமணி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார் விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே முடிவடைந்தது.

முனைவர் சு.வைரமணி
சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர்





Scanned with CamScanner




200 பனைமர விதைகள் கல்லூரி வளாகத்தில் நடப்பட்டன




மக்களைத்தேடி இந்திய மருத்துவம் (ஆயுஷ் ஆப்கே திவார் ) திட்டத்தின்கீழ் மூலிகைக் கன்றுகள் கல்லூரி வளாகத்தில் 3-9-2021 அன்று நடப்பட்டன.



பனைமர விதைகள் பெறுதல்



Scanned with CamScanner









குடிமைப்பயிற்சி முகாம் 1
நாள் : 09-10-21
சிறப்பு விருந்தினர் :
K.A.MIRASH KAREEM
Principal,
SSM Senior Secondary School
பங்குபெற்றோர் :
2020 - 2022 அணி மாணவர்கள்



குடிமைப்பயிற்சி முகாம் 2
நாள் : 04-02-2022
சிறப்பு விருந்தினர் :
பேரா.எம்.ஜெகநாதன்
(பேராசிரியர், பணி ஒய்வு)
பங்குபெற்றோர்:
2021 - 2023 அணி மாணவர்கள்



Scanned with CamScanner

**75 வது சுதந்திர**
**அமுதப்பெருவிழா**
**கொடிக்கம்பம் அமைத்தல்**

இந்திய ஒன்றிய அரசால் 75வது விடுதலை நாள் விழா அமுதப்பெருவிழா என ஓர் ஆண்டு கொண்டாடப்பட்டது.

இதனை ஒட்டி ஆண்டு முழுவதும் பல்வேறு போட்டிகள், நிகழ்வுகள், பேரணிகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டன. இதனைக் கொண்டாடும் வகையில் கல்லூரியில் சுதந்திர அமுதப்பெருவிழா கொடிக்கம்பம் அமைத்திட தீர்மானிக்கப்பட்டது

15 அடி உயரத்தில் இருந்த கொடிக் கம்பத்திற்குப் பதிலாக 30 அடி உயர கொடிமரம் ஓர் அழகிய 3 அடி உயர பீடத்தில் அமைக்கப்பட்டது.

2020-2022 ஆம் ஆண்டு அணி மாணவர்கள் ரூபாய் 9,300/- ஓய்வுபெற்ற பேராசிரியர் ம.ஜெகநாதன் அவர்கள் ரூபாய் 6,000/- மதிப்பிலான கட்டுமானப் பொருட்கள் நன்கொடை அளித்தனர். மீதமுள்ள செலவுத்தொகை பெற்றோர் ஆசிரியர் கழகத்திலிருந்து பெறப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் தலைமையில் இக்கொடி பீடத்தை திறந்துவைத்து. 30-5-2022 அன்று தருமபுரி மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்குனர் முனைவர் இராமலெட்சுமி கொடியேற்றினர்.






Scanned with CamScanner




## 75 வது சுதந்திர அமுதப்பெருவிழா நிறைவு நாள்

75 வது சுதந்திர தினம் நாடு முழுவதும் அமுதப்பெருவிழா என்ற பெயரில் பிரம்மாண்டமாக அனுசரிக்கப்பட்டது. 76 வது சுதந்திர நாளான 15-8-22 அன்று அமுதப்பெருவிழா நிறைவடைந்தது.

கல்லூரியில் சுதந்திர அமுதப்பெருவிழா நினைவாக 33 அடி உயரத்தில் அழகான கிரானைட் பீடத்தில் அமைக்கப்பட்ட கொடிக்கம்பத்தில் சுதந்திரக்கொடி யேற்றி கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் இந்நிகழ்வை நிறைவு செய்தார்.

கல்லூரியின் அனைத்துப்பேராசிரியர்களும், அலுவலக ஊழியர்களும் இந்நிகழ்வில் பங்கேறறனர்.






Scanned with CamScanner

**அரசு கல்வியியல் கல்லூரி,குமாரபாளையம் - 638183. நாமக்கல் மாவட்டம்.**

**மாணவர் மன்றப் பொறுப்பாளர்கள் - 2020-2022**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவர் தலைவர் | பிரவேந்திரன்.ரா | (பொருளறிவியல்) |
| 2. | மாணவர் துணைத்தலைவர் | சங்கீதா.ரா | (பொருளறிவியல்) |
| 3. | ஆசிரியர் மன்றச்செயலர் | கிருத்திகா.ச | (கணிதம்) |
| 4. | விளையாட்டுத்துறைச் செயலர் | சூரியா.ஞா | (கணிதம்) |
| 5. | விளையாட்டுத்துறைத் துணைச் செயலர் | கீர்த்தனா.சி | (கணிதம்) |
| 6. | சமூகப்பணி மன்றச்செயலர் | ஹர்சவர்தினி.ம | (தமிழ்) |
| 7. | சமூகப்பணி மன்றத்துணைச் செயலர் | நந்தினி.மு | (தமிழ்) |
| 8. | ஆண்டுமலர் செயலர் | தங்கராஜ்.ஆ | (தமிழ்) |
| 9. | கலை மற்றும் கைக்கலைத்துறைச் செயலர் | வனிதா.தி | (பொருளறிவியல்) |
| 10. | கலை மற்றும் கைக்கலைத்துறைத்துணைச்செயலர் | நிவேதா.சு | (பொருளறிவியல்) |
| 11. | கேள்விக்காட்சிகல்வித்துறைச் செயலர் | மனோஜ்குமார்.ரா | (பொருளறிவியல்) |
| 12 | தமிழ்த்துறைச் செயலர் | சுவாசினி.நா | (தமிழ்) |
| 13 | தமிழ்த்துறை துணைச்செயலர் | ராஜேஸ்.ரா | (தமிழ்) |
| 14. | ஆங்கிலத்துறைச் செயலர் | பார்த்திபன்.ப | (ஆங்கிலம்) |
| 15. | ஆங்கிலத்துறைத் துணைச்செயலர் | பொன்பரனி.சு | (ஆங்கிலம்) |
| 16. | கணிதத்துறைச் செயலர் | லோகேஸ்.ச.ப. | (கணிதம்) |
| 17. | கணிதத்துறைத் துணைச்செயலர் | பவித்ரா.ச | (கணிதம்) |
| 18. | வரலாற்றுத்துறைச் செயலர் | சூரியராஜன்.ரா | (வரலாறு) |
| 19. | வரலாற்றுத்துறைத் துணைச்செயலர் | சிவசங்கரி.கு | (வரலாறு) |
| 20. | உயிரறிவியல்துறைச் செயலர் | தனபால்.மு | (உயரறிவியல்) |
| 21. | பொருளறிவியல்துறைச் செயலர் | கீர்த்தனா.நா | (பொருளறிவியல்) |
| 22. | நூலகத்துறைச்செயலர் | சிவசங்கரி.கு | (வரலாறு) |
| 23. | நூலகத்துறை துணைச்செயலர் | வெங்கடாசலம்.ச | (பொருளறிவியல்) |
| 24. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்க செயலர் | மௌனிகா.ஜி | (கணிதம்) |
| 25. | தகவல்தொழில்நுட்பச் செயலர் | பிரபாகரன்.ப | (கணிதம்) |
| 26. | நுண்கலை மன்றச்செயலர் | குணசீலன்.த | (பொருளறிவியல்) |
| 27. | நுண்கலை மன்ற துணைச்செயலர் | திவ்யா.ரா | (கணிதம்) |
| 28. | சிவப்பு நாடா மன்றச்செயலர் | துர்காதேவி.ச | (கணிதம்) |
| 29. | சிவப்பு நாடா மன்ற துணைச்செயலர் | ரத்னபாரதா.ச | (ஆங்கிலம்) |
| 30. | கலாச்சார சங்கச் செயலர் | பவித்ரா.ப.செ | (பொருளறிவியல்) |
| 31. | கலாச்சார சங்கத் துணைச்செயலர் | சௌந்தர்யா.பே | (ஆங்கிலம்) |

**சேர்க்கைப் பரவல் விவரம் 2021-22 : இவ்வாண்டு சேர்க்கை பெற்ற மாணவர்களின் பரவல் வருமாறு :**

சேலம் - 29, ஈரோடு - 20, நாமக்கல் - 12, தர்மபுரி - 7,திருச்சி - 4, கள்ளக்குறிச்சி, கரூர், திருப்பூர் தலா-3, கிருஷ்ணகிரி, சிவகங்கை, கோவை, விழுப்புரம், அரியலூர் தலா-2, திருப்பத்தூர், தேனி, திருவள்ளூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல்,தென்காசி, பெரம்பலூர், தூத்துக்குடி தலா-1,

| BC | | BCM | | MBC | | SC | | SCA | | ST | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G |
| 20 | 23 | 0 | 1 | 22 | 18 | 5 | 7 | 1 | 2 | 0 | 1 | 48 | 52 |



Scanned with CamScanner

**அரசு கல்வியியல் கல்லூரி,குமாரபாளையம் - 638183. நாமக்கல் மாவட்டம்.**

**மாணவர் மன்றப் பொறுப்பாளர்கள் - 2021 - 2023**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவர் தலைவர் | ஆனந்தன்.ஆ | (உயரறிவியல்) |
| 2. | மாணவர் துணைத்தலைவர் | தீபக்.லோ | (தமிழ்) |
| 3. | ஆசிரியர் மன்றச்செயலர் | மாலதி. பா | (பொருளறிவியல்) |
| 4. | ஆசிரியர் மன்றத்துணைச்செயலர் | தெய்வானநதம்,ம | (கணிதம்) |
| 5. | விளையாட்டுத்துறைச் செயலர் | விக்னேஸ்வரன் | (பொருளறிவியல்) |
| 6. | விளையாட்டுத்துறைத் துணைச் செயலர் | ராஜா.செ | (பொருளறிவியல்) |
| 7. | சமூகப்பணி மன்றச்செயலர் | இளங்கோவன். பி | (கணிதம்) |
| 8. | சமூகப்பணி மன்றத்துணைச் செயலர் | ராஜாநிலா.ரா | (வரலாறு) |
| 9. | ஆண்டுமலர் செயலர் | மெய்யப்பன்.க | (வரலாறு). |
| 10. | கலை மற்றும் கைக்கலைத் துறைச்செயலர் | பன்னீர்செல்வம்.ப | (கணிதம்) |
| 11. | கலை மற்றும் கைக்கலைத்துறைத்துணைச்செயலர் | தாரணி.ச | (ஆங்கிலம்) |
| 12. | கேள்விக்காட்சிகல்வித்துறைச் செயலர் | எசேக்கியல் ஜான்.சி | (ஆங்கிலம்) |
| 13. | கேள்விக்காட்சி கல்வித்துறை துணைச்செயலர் | கோகுல்.கா | (பொருளறிவியல்) |
| 14. | தமிழ்த்துறைச் செயலர் | நவின்.கு | (தமிழ்) |
| 15. | தமிழ்த்துறை துணைச்செயலர் | கோவிந்தராஜ்.மா | (தமிழ்) |
| 16. | ஆங்கிலத்துறைச் செயலர் | ஒவியா.மா | (ஆங்கிலம்) |
| 17. | ஆங்கிலத்துறை துணைச்செயலர் | மதுமிதா.க.ர | (ஆங்கிலம்) |
| 18. | கணிதத்துறைச் செயலர் | கோபிநாத்.சு | (கணிதம்) |
| 19. | கணிதத்துறைத் துணைச்செயலர் | பாஹானாமூபின்.இ | (கணிதம்) |
| 20. | வரலாற்றுத்துறைச் செயலர் | அகத்தியா.து | (வரலாறு) |
| 21. | வரலாற்றுத்துறைத் துணைச்செயலர் | கீர்த்தனா.வ | (வரலாறு) |
| 22 | உயிரறிவியல்துறைச் செயலர் | விக்னேஷ்.மு | (உயிரறிவியல்) |
| 23. | உயிரறிவியல்துறைத் துணைச்செயலர் | ஹரிஷ்குமார்.ப | (உயிரறிவியல்) |
| 24. | பொருளறிவியல்துறைச் செயலர் | பிரபாகரன். மு | (பொருளறிவியல்) |
| 25. | பொருளறிவியல்துறைத் துணைச் செயலர் | தாமரைச்செல்வி.ரா | (பொருளறிவியல்) |
| 26. | நூலகத்துறைச்செயலர் | ஆதித்தியன்.மு | (கணிதம்) |
| 27. | நூலகத்துறைத் துணைச்செயலர் | அஜித்பாபு.கு | (உயிரறிவியல்) |
| 28. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கச்செயலர் | அலெக்ஸ்பாண்டியன்.அ | (கணிதம்) |
| 29. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்க துணைச் செயலர் | சினேகா.அ.ம. | (பொருளறிவியல்) |
| 30. | தகவல்தொழில்நுட்பச் செயலர் | சீனிவாசன்.போ | (கணிதம்) |
| 31. | தகவல் தொழில்நுட்ப துணைச் செயலர் | வசந்தராஜ்.அ | (ஆங்கிலம்) |
| 32. | நுண்கலை மன்றச்செயலர் | சுதாகரன்.சி | (பொருளறிவியல்) |
| 33. | நுண்கலை மன்ற துணைச்செயலர் | சுருதி.வி | (கணிதம்) |
| 34. | சிவப்பு நாடா மன்றச்செயலர் | சக்திவேல்.சு | (பொருளறிவியல்) |
| 35. | சிவப்பு நாடா மன்ற துணைச்செயலர் | நந்குமார்.மா | (உயிரறிவியல்) |
| 36. | கலாச்சாரசங்கச் செயலர் | செல்வராணி.அ | (பொருளறிவியல்) |
| 37. | கலாச்சாரசங்க துணைச்செயலர் | சௌமியா.கு | (ஆங்கிலம்) |
| 38. | சுற்றுச்சூழல் மன்றச்செயலர் | ஐஸ்வர்யா.ஆ | (உயிரறிவியல்) |



Scanned with CamScanner





## கூடைப்பந்து மைதானம் புனரமைப்பு

ரூசா திட்டத்தில் ரூ. 17 லட்சம் மதிப்பீட்டில் கூடைப்பந்து மைதானம் புனரமைக்கப்பட்டது. உலகத்தரத்திலான கூடைப்பந்து மைதானத்தைப் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் விழா 3-9-2021 அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் இதனைத்திறந்து வைத்தார்.

ரூசா திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெ. மனோகரன் உடற்கல்வி இயக்குநர் முனைவர் மொ.ரவி, முனைவர் மா. அருணாசலம் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்





Scanned with CamScanner

அரசுகல்வியியல்கல்லூரி, குமாரபாளையம்

# கல்லூரியின்சிலவரலாற்றுக்குறிப்புகள்.

தொகுப்பு :முனைவர் அ. ஜான்பீட்டர், முதல்வர்

## கல்லூரியின்பெயர்

அரசாணை (பலவகை) எண் 1117 நாள் 23.06.1955 இன்படி **அரசினர் பயிற்சிக்கல்லூரி (Government Training College)** என்ற பெயரில் ஆண்கள் மட்டும்பயிலும் வகையில் இக்கல்லூரி தொடங்கப்பட்டது.

அரசாணை பல வகை எண் **1718** கல்வி(டபிள்யூ) த்துறை நாள் **29.08.1980** இன்படி இக்கல்லூரியின் பெயர் **அரசுகல்வியியல்கல்லூரி** எனத்தமிழிலும் **Government College of Education** என ஆங்கிலத்திலும் மாற்றப்பட்டது

## கல்லூரிக்கட்டடங்கள் திறப்பு

இக்கல்லூரி தொடக்கத்தில் அன்றைய குமாரபாளையம் அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளிவளாகத்தின் ஒரு புறத்தில் தொடங்கி நடத்தப்பட்டது. பின்னர் கல்லூரிக்கான இடம் குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமத்தில் தேர்வுசெய்யப்பட்டுத்தற்போதைய வளாகத்தில் **13.11.1970** அன்று அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் **எஸ்.ஜே. சாதிக்பாட்ஷா** அவர்கள் கல்லூரிக் கட்டத்திற்கானகால் **கோளினைநாட்டினார்.**

**05.03.1972** அன்று தமிழ்நாட்டின் அன்றைய கல்வி அமைச்சர் **நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன்** அவர்கள் புதியகட்டடத்தைத்( இன்றைய முதன்மைக்கட்டடம்) திறந்துவைத்தார். பிற்பட்டோர் தலத்துறைஅமைச்சர் **கே.ராஜாராம்** அவர்கள் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். புதிய கட்டடமானது. ரூ. **6,70,000** திட்டமதிப்பீட்டில் அப்பொழுது கட்டப்பட்டது. இதில் ரூ.**50,000** பல்கலைக்கழக மானியக்குழுவின் பங்களிப்பு அளிக்கப்பட்டது. 23. புதிய கட்டடத்தில் 03.1972 முதல் கல்லூரி செயல்பட்டு 31.03.1972 இல் கல்லூரி செயல்பட்டபள்ளிவளாகம் பள்ளி நிருவாகத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

## புலவர்பட்டயவகுப்பு

**1959** ஆம் ஆண்டு புலவர் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு 100 மாணவர்கள் ஆண்டுதோறும் பயிற்சி பெற்றனர். இவ்வகுப்பு **1977** வரை தொடர்ந்து நடைபெற்று பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது.

## எம்.எட்வகுப்பு

**1974** ஆம் ஆண்டு முதல் பகுதி நேர எம்.எட் வகுப்புகள் ஆண்டு தோறும் **8** மாணவர்கள் பயிலும் வகையில் தொடங்கப்பட்டது.**1982-83** ஆம் ஆண்டு இது முழு நேர வகுப்பாக மாற்றப்பட்டது. தேசிய ஆசிரியர் கல்விக் குழுவின் (NCTE) ஆய்வுக்குப் பின்னர் போதுமான ஆசிரியர் நியமன மின்மையால் எம்.எட் அங்கீகாரம் **24.09.2009** நாளிட்ட NCTE கடிதத்தால் ரத்து செய்யப்பட்டது.



Scanned with CamScanner

அரசாணை (நிலை) எண் 97 உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 01.03.2011 இன்படி அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளிலும் எம்.எட் வகுப்பு தொடங்க ஆணையிடப்பட்டது. இப்பாடபிரிவுக்கென நான்கு பணியிடங்கள் அந்த ஆணையின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்டன.ஆயினும் தேசிய ஆசிரியர்க் கல்விக்குழு அங்கீகாரமும் ஆசிரியர் நியமனமுமின்மையால் இக்கல்லூரியில் எம்.எட். மாணவர் சேர்க்கை நடத்தப்பெறவில்லை.

## இருபாலர்கல்லூரியாகமாற்றம்

1990 முதல் இக்கல்லூரியில் பெண்களும் பயிலும் வகையில்.பெண்களுக்கு 50 சதஇடஒதுக்கீடு வழங்கி ஆணைபிறப்பிக்கப்பட்டது. (GO (MS) NO 543EDUCATION(Z1) DEPT. Dt. 16.04.1990)

## பல்கலைக்கழகஇணைவு

தொடக்கத்தில் சென்னைப்பல்கலைக் கழகஇயைபுடன் 75 மாணவர்களுக்கு B.T என்றபட்டவகுப்பு நடத்தப்பட்டது. பின்னர் 1969-70 ஆண்டில் 100 மாணவர்களாக உயர்த்தப்பட்டது.

சேலம்பெரியார்பல்கலைக்கழகம்தொடங்கப்பட்டதையொட்டி1998-99 முதல் அப்பல்கலைக்கழகத்தின் இணைவுடன் பி.எட் வகுப்புகள் நடத்தப்பட்டன. 2008-2009 முதல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டுத் தமிழ்நாட்டின் அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளும் அப்பல்கலைக் கழக இணைவுடன் செயல் படவகை செய்தபோது இக்கல்லூரியும் அப்பல்கலைக் கழக இணைவைப்பெற்றது.

## மையக்கலந்தாய்வின்வழிஒற்றைச்சாளரசேர்க்கை.

2008-09 முதல் மநில அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுமையக் கலந்தாய்வு முறையில் பி. எட் சேர்க்கை நடத்தப்படுகிறது. மையக் கலந்தாய்வில் பங்குபெற்று கல்லூரிக்க:.ச் சேர்க்கை ஆணை பெற்ற மாணவர்கள் இக்கல்லூரியில் சேர்க்கப்படுகின்றனர்.

## கல்லூரியின்பரப்பளவு

அரசினர் பயிற்சிக்கல்லூரி அமைக்கப்பட்டபோது, திருச்செங்கோடு தாலுக்கா குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமத்தில் 25.நாட்டுக்குட்டைத்தார்,26.புளியந்தார், 32.பெரிய விரக்குட்டைத்தார் என்ற பெயருடைய இடங்களில் முறையே 5.56, 4.01, 10.42பரப்பளவில் மொத்தம் 19.99 ஏக்கர் நிலம் GO (MS) NO 2273 EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT DATED 27.10.1960 இன்படி கல்லூரிக்கென நில ஆர்ஜிதம் செய்து வழங்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் பயன்பாட்டிற்கென 60 சதுரமீட்டர் இடம் 0.90 ஏக்கர் கல்லூரிக் கல்வித்துறை ந.கஎண் 83936 எ1(2) \80 நாள் 18.12.84 இன்படி வழங்கப்பட்டது.

கல்லூரியின் தென்மேற்குப்பகுதியில் ஆக்கிமித்துக்கட்டப்பட்ட சிவன்கோயில் தொடர்புடைய வழக்கில் ஒரு சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் கல்லூரியின் சுமார் 1 ஏக்கர் பரப்பளவு இடத்தைக் கைவிட நேர்ந்தது

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.கஎண் 10805 \ 2013 (எல்2) நாள் 11.05.2013 இன்படி கல்லூரியின் வளாகத்திலிருந்து 9.34 ஏக்கர் நிலம் பிரிக்கப்பட்டு அந்த இடத்தில்அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட 10.01.2014 அன்று



Scanned with CamScanner

கட்டடக்கால்கோள் விழா நடத்தப்பட்டது .இதனால் கல்லூரியின் பின்புறம் அமைந்த இடங்களும் வட பகுதியில் அமைந்த இடமும் அரசு கலை அறிவியல் கல்லூரி வசமானது.

இதனால் கல்லூரியின் தற்போதைய பரப்பளவு 9.23 ஏக்கர் என்ற அளவில் குறைந்தது.

**NAAC மதிப்பீடு**

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் தன்னாட்சித் தகுதியுடன் அமைக்கப்பட்ட .தேசியதர நிர்ணயச் சான்றுக்குழு கல்லூரியை இரு சுழற்சிகளில் ஆய்வு செய்து தகுதிச்சான்று வழங்கியது. 20.05.2005 தேதியிட்ட சான்றின்படி 20.10.2010 வரையிலான ஐந்தாண்டுகளுக்கும் 05.01.2013 தேதியிட்டசான்றின்படி 04.06.2018 வரையிலுமானஐந்தாண்டுகளுக்கும் B தகுதிச் சான்று வழங்கியது.

**ரூசாநிதி**

தேசியதர நிர்ணயச் சான்றுக் குழு வழங்கிய சான்றின் அடிப்படையில் அனைவருக்கும் உயர்கல்வி (RastriyaUchatharSarvasikshaAbhiyan) திட்டத்தின் சார்பில் கல்லூரிக்கு 2 கோடிநிதி -புதிய கட்டடம் கட்டுவதற்குரூ 70 லட்சமும் கட்டடபழுது நீக்குதலுக்கு 70 லட்சமும் தளவாடங்கள், கருவிகள் வாங்குவதற்கு ரூ.60 லட்சமும் என ஒதுக்கீடு செய்து வழங்கியது. இந்நிதி உதவியால் புதிய கருந்தரங்க கட்டடம், கூடைப் பந்தாட்டமைதானம், மகளிர் விடுதிக்கு இருதளக் கழிவறை, கணினிகள், காட்சி விழ்த்திகள், படி எந்திரங்கள், இரும்புத் தளவாடங்கள், குளிர்சாதனங்கள் உள்ளிட்ட வசதிகள் , பொருள்கள் பெறப்பட்டன.

**கல்லூரியின்கட்டடங்கள்**

கல்லூரியில் பல்வேறு ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டடங்களும் அதன் பரப்பளவும் பின்வருமாறு: (அளவுகள்சதுரமீட்டரில் )

| எண் | கட்டடத்தின்பெயர் | கட்டப்பட்ட ஆண்டு | பரப்புச. மீ | போர்டி கோ | ஹெட் ரூம் |
|---|---|---|---|---|---|
| 1 | முதன்மைக்கட்டடம்தரைத்தளம் | 1973 | 1796.21 | | |
| 2 | முதன்மைக்கட்டடம்முதல்தளம் | 1985 | 537.75 | | |
| 3 | அண்ணாநூற்றாண்டுகட்டடம் | 2009 | 342 | | |
| 4 | கருத்தரங்ககட்டடம் | 2018 | 397.72 | 15.12 | 24.18 |
| 5 | எம்.ஜி.ஆர்நூற்றாண்டுகட்டடம் | 2019 | 326.04 | 19.89 | |
| 6 | எம்.ஜி.ஆர்நூற்றாண்டுகட்டடம்முதல்தளம் | 2019 | 326.04 | | 35.10 |
| 7 | ஆண்கள்விடுதி | 1985 | 395.08 | | |
| 8 | பெண்கள்விடுதி | 1985 | 1361.23 | | |
| 9 | முதல்வர்குடியிருப்பு | 1980 | 128.15 | | |
| 10 | பணியாளர்குடியிருப்பு | 1980 | 133.13 | | |
| 11 | கிணறு | 1972 | 13.20 | | |
| 12 | மோட்டார்அறை | 1980 | 8.41 | | |
| 13 | பம்ப்அறைபோர்வெல் | 1972 | 12.60 | | |



Scanned with CamScanner

## மண்டலக்கல்லூரிக்கல்விஇயக்ககஇணைவு

கோயமுத்தூர் மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்குநரகம் பிரிக்கப்பட்டு ,2016 முதல் தருமபுரி மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்குதரகம் தொடங்கப்பட்டு அம்மண்டலத்தின் இக்கல்லூரி இணைக்கப்பட்டது.

## இரண்டாண்டுவகுப்புகளாகமாற்றம்

2015-16 ஆம் ஆண்டு முதல் தேசிய ஆசிரியர் கல்விகுழுமத்தின் 2014 விதிகளின்படி பி.எட் மற்றும் எம்.எட் வகுப்புகள் இரண்டாண்டு வகுப்புகளாக மாற்றப்பெற்றன.

## கல்லூரிவிடுதி

கல்லூரியின் விடுதி தொடக்கக்காலத்தில் ஏறத்தாழ 50 மாணவர்கள் சேர்க்கையுடன் காவிரிக் கரையில் இருந்த **அப்புராயர்சத்திரத்தில்** நடைபெற்றது. மாணவர்களுக்கான மதிய உணவு குதிரை வண்டியின் மூலமாகக் கல்லூரி வளாகத்திற்குத் தினமும் எடுத்து வரப்பட்டது. மேலும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை எஸ்.எஸ்.எம் அறக்கட்டளையின் சார்பில் இலவசமாக வண்டியில் கொணர்ந்து அப்புராயர்சத்திரத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. கல்லூரியின் தற்போதைய வளாகத்தில் ரூ.10,00,000 மதிப்பீட்டில் விடுதி கட்டப்பட்டு 1983-84 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வரும் வரை அப்புராயர்சத்திர விடுதி செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

1990 இல் பெண்கள் கல்வி கற்க ஆணைவழங்கப்பட்டதையொட்டி 50 மாணவிகள் தங்கும் வகையில் பெண்களுக்கான விடுதியும் தனியே கட்டப்பட்டது. கல்லூரியின் தென்புற விடுதி (குறிஞ்சி இல்லம்) பெண்கள் விடுதியாகவும் வடபுற விடுதி (காவிரி இல்லம்) ஆண்கள் விடுதியாகவும் தொடக்கத்தில் செயல்பட்டது.. பெண்கள் அதிக எண்ணிக்கையில் விடுதியில் சேர்ந்த்ததை அடுத்து இடப்பற்றாக்குறையைச் சமாளிப்பதன் பொருட்டு குறிஞ்சி இல்லம் ஆண்கள் விடுதியாகவும் காவிரிஇல்லம் பெண்கள் விடுதியாகவும் ஜூன் 2018 முதல் மாற்றப்பட்டன.

(விடுதியை அடையாளப்படுத்த எளிமை கருதி ,இப்பகுதியின் நிலவியல் தன்மையைச் சிறப்பிக்கும் வகையில் இவ்விருவிடுதிக்கும் காவிரி , குறிஞ்சி இல்லங்கள் என 2022 இல் பெயரிடப்பட்டது.)





Scanned with CamScanner

राष्ट्रीय मूल्यांकन एवं प्रत्यायन परिषद

NATIONAL ASSESSMENT AND ACCREDITATION COUNCIL

## Quality Profile

Name of the Institution : Government College of Education
Place : Komarapalayam, Dist. Namakkal, Tamil Nadu

| Criteria | Weightage $(W_i)$ | Criterion-Wise Grade Point Averages $(Cr_i GPA)$ | $W_i \times Cr_i GPA$ |
|---|---|---|---|
| I. Curricular Aspects | 050 | 2.20 | 110 |
| II. Teaching-Learning and Evaluation | 450 | 2.24 | 1008 |
| III. Research, Consultancy and Extension | 100 | 2.25 | 225 |
| IV. Infrastructure and Learning Resources | 100 | 2.40 | 240 |
| V. Student Support and Progression | 100 | 2.40 | 240 |
| VI. Governance and Leadership | 150 | 2.00 | 300 |
| VII. Innovative Practices | 050 | 2.30 | 115 |
| Total | $\sum_{i=1}^{7} W_i = 1000$ | | $\sum_{i=1}^{7} W_i \times Cr_i GPA = 2238$ |

$$\text{Institutional Score} = \frac{\sum_{i=1}^{7} (W_i \times Cr_i GPA)}{\sum_{i=1}^{7} W_i} = \frac{2238}{1000} = 2.24$$

Grade = B    Descriptor = GOOD

Date : January 05, 2013

Director

- [illegible]
- [illegible]
- [illegible]

EC/62/RAR/123

---

राष्ट्रीय मूल्यांकन एवं प्रत्यायन परिषद

NATIONAL ASSESSMENT AND ACCREDITATION COUNCIL

## Certificate of Accreditation

The Executive Committee of the
National Assessment and Accreditation Council
on the recommendation of the duly appointed
Peer Team is pleased to declare the
Government College of Education
Komarapalayam, Dist. Namakkal, affiliated to Tamil Nadu Teachers Education University, Tamil Nadu as
Accredited
with CGPA of 2.24 on four point scale
at B grade
Valid up to January 04, 2018

Date : January 05, 2013

Director

EC/62/RAR/123

---

राष्ट्रीय मूल्यांकन एवं प्रत्यायन परिषद

विश्वविद्यालय अनुदान आयोग का स्वायत्त संस्थान

NATIONAL ASSESSMENT AND ACCREDITATION COUNCIL

An Autonomous Institution of the University Grants Commission

## Certificate of Accreditation

The Executive Committee of the
National Assessment and Accreditation Council
on the recommendation of the duly appointed
Peer Team is pleased to declare the
Government College of Education
Komarapalayam, Dist. Namakkal, affiliated to Periyar University, Tamil Nadu as
Accredited
at the B level

Date : May 20, 2005

Director

- [illegible]
- [illegible]

---

## Quality Profile

Name of the Institution : Government College of Education
Place : Komarapalayam, Dist. Namakkal, Tamil Nadu

| Criterion | Criterion Score $(C_i)$ | Weightage $(W_i)$ | Criterion X Weightage $(C_i W_i)$ |
|---|---|---|---|
| I. Curricular Design and Planning | 80 | 10 | 800 |
| II. Curriculum Transaction and Evaluation | 68 | 40 | 2720 |
| III. Research, Development and Extension | 65 | 05 | 325 |
| IV. Infrastructure and Learning Resources | 80 | 20 | 1600 |
| V. Student Support and Progression | 75 | 10 | 750 |
| VI. Organisation and Management | 80 | 15 | 1200 |
| | | 100 | $\sum C_i W_i = 7395$ |

$$\text{Institutional Score} = \frac{\sum C_i W_i}{\sum W_i} = \frac{7395}{100} = 73.95$$

Director

EC/36/076

Scanned with CamScanner

# உங்களுக்குத் தெரியுமா?

**புகையிலையில் உள்ள 4000 வகையான**

**நச்சுப் பொருட்கள் கீழ்க்கண்ட பெரும் விளைவுகளை உண்டாக்குகின்றன.**




முடி உதிர்தல்



கண் புரை



பல் சொத்தை



நுரையீரல் புற்று நோய்



இதய நோய்கள்



வயிற்றுப் புண்



விரல்களில் நிறம் மாறுதல்



குறைபாடு உள்ள விந்தணு உருவாதல்



கால் விரல் அழுகிப்போதல்



மற்றும்

# கொடுமையான மரணம்

**இந்த நோய்களின் அபாயத்திலிருந்து விடுபட**

**புகையிலை பழக்கத்தை நிறுத்துங்கள் இன்றே! இப்பொழுதே!!!**

**நாட்டுநலப்பணி திட்டம் (NSS)**

**அரசு கல்வியியல் கல்லூரி**

குமாரபாளையம் - 638 183

Scanned with CamScanner